செ.வெ.எண்: 787 நாள்: 16.11.2019

**விராலிமலை சட்டமன்ற தொகுதியில் இன்றையதினம் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களில் உடனடியாக ரூ.25.16 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

-----------------------------------------------------------------------------------------

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் இன்று (16.11.2019) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து, கோரிக்கை மனுக்களை பெற்றார். இந்நிகழ்வு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.டி.சாந்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இன்றையதினம் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குளத்தூர், தென்னதிரையான்பட்டி, களமாவூர், ஆவூர், பாக்குடி ஆகிய இடங்களில் பொதுமக்களை நேரடியாக சந்தித்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. மேலும் இம்முகாம்களில் வரப்பெற்ற மனுக்களில் 252 மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு ரூ.25,16,200 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் புதுக்கோட்டை மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் புதுக்கோட்டையில் புதிய அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அமைக்கப்பட்டு பல்வேறு உயர் மருத்துவ சிகிச்சை பிரிவுகளுடன் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் உள்ள பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு காவிரி குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல ஆண்டுகள் கோரிக்கையான காவிரி - குண்டாறு இணைப்புத் திட்டம் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்பட உள்ளது. இதன்மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயம் செழிப்படைந்து விவசாயிகளின் வாழ்வாதாரம் முன்னேற்றமடையும். மேலும் பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே பொதுமக்கள் இதுபோன்ற முகாம்களில் தங்களது பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை அளித்து தீர்வு கண்டு பயன்பெற வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், பேராம்பூர் ஊராட்சி, மலம்பட்டியில் ரூ.8.70 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி கட்டடத்தினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.ரேணுகா, வட்டாட்சியர்கள் முருகப்பன், சதீஸ்குமார், சாலைதவவளவன், கூட்டுறவு சங்கத்தலைவர் முத்துசாமி மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**